**மனித வள மேம்பாட்டு நிறுவகம் - 2016**

---

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, நிதிசார் செயலாற்றல் பற்றிய கூற்று, உரிமை மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 1979 இன் 11 ஆம் இலக்க மனித வள மேம்பாட்டு சட்டத்தின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைபழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைபழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுகள்

### 2.1 முனைபழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனத்தின் குறுகிய கால பயிற்சி நெறிக்காக பயன்படுத்தப்படும் வங்கிகணக்கில் நீண்ட காலமாக இனங்காணப்படாத ரூபா. 3,996,475 வைப்புக்கள் எந்த வருமான மூலம் என இனங்காணப்படாது அட்டுறு செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள், முற்பணங்கள் மற்றும் அறவிடப்படவேண்டியவைகளில் உள்ள பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லா சொத்தில் காட்டப்பட்டுள்ளன.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டுள்ள ரூபா 52,995,480 நிலையான சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 191,100 மற்றும் ஒரு அலுவலருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 84,944 கடன் நிலுவைகள் முறையே 13 வருடம் மற்றும் 6 வருடம் கடந்துள்ள போதும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவைகள் | |
| (i) 1 ஆம் அத்தியாயம் 2.2 ஆம் பிரிவு | மேலதிக நேர வேலை செய்வதற்காக கொடுப்பனவு செய்யும் போது தாபனவிதிக்கோவையில் உள்ளபடி கொடுப்பனவு செய்வதற்கு பதிலாக நிலையான படிகள் கொடுத்தமையால் மீளாய்வாண்டில் ரூபா. 325,283 மேலதிக நேரக்கூலி கூடுதலாக கொடுக்கப்பட்டமை பற்றி தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டிருந்தது. |
| (ii) XX ஆம் அத்தியாயம் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | நிறுவனத்தில் கல்வி மற்றும் கல்விசாரா அனைத்து அலுவலகர்களும் வருகைதரும் மற்றும் வெளிச்செல்லும் விரலடையாளம் இடும் நேரம் இடப்படவேண்டிய போதும் கல்விசார் பதவியணியினரால் 06 அலுவலர்கள் வருகைதந்தது பற்றி உறுதிப்படுத்தாமல் ரூபா 14,513,885 சம்பளம் மற்றும் படிகள் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 756 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு மெய்மையாய்வு செய்யப்படவில்லை. |
| (இ) 2015 யூன் 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | குறித்த நோக்கம் முடிவடைந்த நேரத்தில் சீர்செய்யப்படவேண்டிய போதிலும் 5 தடவைகள் வழங்கப்பட்ட கூட்டுமொத்த தொகை ரூபா. 44,925 பெறுமதியான முற்பணம் சீர்செய்ய 60 - 110 நாட்கள் வரையான காலம் முடிவடைந்திருந்தது. மற்றும் 08 சந்தர்ப்பங்கள் தொடர்பாக கூட்டுமொத்த தொகை ரூபா 115,381 பெறுமதியான முற்பணம் 2017 ஜனவரி 24 ஆம் திகதி வரை சீராக்கம் செய்யப்படவில்லை. |
| (ஈ) 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடி/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அரச வியாபாரங்களுக்கு சொந்தமான காசு முதலீடு செய்யும் போது அது சம்பந்தமாக திறைசேரியில் அனுமதி பெறவேண்டியிருந்த போதும் 2015 ஆம் ஆண்டில் ரூபா. 89.5 மில்லியன் மற்றும் 2016 ஆம் ஆண்டில் ரூபா. 40 மில்லியன் பெறுமதியான முதலீடு சம்பந்தமாக திறைசேரி அனுமதி பெறப்படவில்லை என்பது பற்றி கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 1995 யூலை 14 ஆம் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | பரீட்சைகள் நடந்த திகதியில் இருந்து 3 மாத காலப்பகுதிக்குள் அதன் பெறுபேறு வெளியிடப்பட வேண்டியிருந்த போதும் அதற்கு எதிராக நிறுவனத்தில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட 5 பரீட்சைகளுக்கான பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 5 - 7 மாதம் வரை தாமதமாகியிருந்தது. 2016 யூன் மாதத்தில் நடைபெற்ற பரீட்சைக்கான பெறுபேறு கணக்காய்வுத் திகதியான 2017 யூன் 30 வரை வெளியிடப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டுக்கான நிறுவக செயற்பாடுகளின் நிதி விளைவு ரூபா. 61,576,424 மிகையாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் மிகையாக ரூபா 24,437,356 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா. 37,139,068 முன்னேற்றத்தை காட்டுகின்றமைக்கான காரணம் பயிற்சி நெறிக்கான செலவு ரூபா. 33,437,619 ஆல் குறைவடைந்தமையாலும் மற்றும் ஏனைய வருமானம் ரூபா. 2,112,639 ஆல் அதிகரித்தமையும் ஆகும்.

2012 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் ரூபா. 19,061,471 ஆக இருந்த மிகை 2014 ஆம் ஆண்டு முடிவில் ரூபா. 11,340,232 ஆக குறைவடைந்துள்ளது. அதன் பின் வருடங்களில் சாதாரணமாக அதிகரித்து மீளாய்வாண்டில் ரூபா. 576,424 ஆக காணப்படுகிறது. அப்படியாக இருந்த போதிலும் நிதி பெறுபேற்றிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லா சொத்திற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா. 49,124,600 பெறுமதியான பங்களிப்பும் 2014 ஆம் ஆண்டு முடிவில் ரூபா. 47,458,572 வரை குறைவடைந்திருந்தது. மீளாய்வு ஆண்டு முடிவில் ரூபா. 104,774,561 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கற்கை நெறிகளை உயர்தரத்தில் வழங்கி சிறப்பை அடைந்தபோதும், கற்கை நெறிகளை முகாமைத்துவம் செய்து சிறப்பை அடைந்த போதும் மற்றும் நிறுவனத்தின் ஆராய்ச்சி அபிவிருத்தி சூழலை உருவாக்கி சிறப்பை அடைந்த போதும் தந்திரோபாய தொடர்பை தனியார்துறையுடன் கட்டியெழுப்பி தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தபோது வினைத்திறன் மற்றும் வினையாற்றலான நிர்வாகம்சார் செயற்பாட்டின் மூலம் சிறப்பை அடைந்தபோதும் கவர்ச்சிகரமான கற்பித்தலையும் கற்கைநெறி மற்றும் நிர்வாக சூழலின் மூலம் நிறுவனத்தின் நோக்கத்தை அடைந்தபோதும், செயற்பாட்டுத்திட்டத்தில் நிறைவேற்றப்படுவதற்காக உள்ளடக்கப்பட்ட 16 செயற்பாடுகளில் 2 மட்டுமே மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளின் போதிய அளவினை உறுதிசெய்வதற்கு மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு செயலாற்றல் அறிக்கை நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனத்தினால் 2014 ஆம் ஆண்டில் மீடியா மற்றும் குரல் மற்றும் படத் தயாரிப்பு பயிற்சி நெறி (உயர் டிப்ளோமா) ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் இப் பயிற்சி நெறி மேற்கொள்ள விசேட அறிவுள்ள விரிவுரையாளர் இல்லாமையால் 2014 ஆம் ஆண்டிற்கு பின் பயிற்சி நெறிக்கு மாணவர்களை ஆட்சேர்க்கப்படவில்லை.

(ஆ) 2014 யூன் 01 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக புதிய அரங்கத்தில் டிப்ளோமா சான்றிதழ் கொடுக்கும் வைபவத்திற்காக பயன்படுத்தப்பட்ட நிறுவனத்துக்கு செந்தமான ரூபா. 69,900 பெறுமதியான மடிக்கணனி ஒன்று காணாமல் போயிருந்த போதிலும் அது பற்றிய முறையான விசாரணை நடத்தி நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) நிறுவனத்திற்காக நிர்வாகம் மற்றும் கல்வி தொடர்பாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் 27.86 பேச்சர்ஸ் உள்ள காணி கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு சொந்தமாக இருந்த போதும் அக்காணியின் உரிமையை மாற்றம் செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4.3 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

2016 மார்ச் மாதத்தில் ரூபா. 10,000,000 நிலையான வைப்பு 4.5 சதவீத வட்டிக்காக 70 நாட்கள் முதலீடு செய்ய இருந்த போதிலும் அவ் முதலீடு 2017 யூன் வரை அவ்வாறே கொண்டு செல்லப்பட்டிருந்தது. மேற்படி முதலீடு ஒரு வருடத்திற்காக முதலீடு செய்திருந்தால் அத்திகதிக்குள் 8.25 சதவீத வருட வட்டிப்படி ரூபா. 825,000 வட்டி வருமானம் ஈட்ட கூடியதாக இருந்த போதிலும் குறுங்கால முதலீடு செய்யப்பட்டதால் நிறுவனத்துக்கு ரூபா. 375,000 பெறுமதியான வட்டி கிடைக்காமல் போனது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டில் மீடியா ஆய்வுகூடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக 2011 ஆம் ஆண்டில் இருந்து 2013 ஆண்டு வரைக்கும் ரூபா. 10,425,293 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா. 14,378 பெறுமதியான மேசை ஒன்றும் கொள்வனவு செய்திருந்தது. ஆனாலும் இந்த ஆய்வுகூடம் 2011 ஆம் ஆண்டில் இருந்து பயன்படுத்தப்படாமல் இருந்தது. அத்துடன் அதற்காக வாங்கிய உபகரணங்கள் அத்திகதிகளில் இருந்து விளைவற்றதாக இருந்தது. ஆய்வுகூடம் சரியான முறையில் பயன்படுத்துவதற்காக அல்லது அந்த உபகரணங்களை உபயோகிப்பதற்கான பயிற்சிநெறி வழங்க தகுதிவாய்ந்த நிரந்தர பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்காக நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் இல்லை என நிறுவன பணிப்பாளரால் 2017 ஒக்டோபர் 04 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

(ஆ) மீளாய்வாண்டு முடிவிலுள்ள காசு மற்றும் குறுங்கால முதலீட்டு நிலுவைகளின் கூட்டுமொத்த தொகை ரூபா. 338,656,044 பெறுமதியும் இவ் நிலுவையில் செலவு செய்யப்படாத மூலதன மானியம் ரூபா. 23,723,718 உள்ளடங்கியிருந்தது. அதனால் அக் காசுகள் நிறுவனத்தின் நோக்கம் வினைத்திறனாக அடைவதற்காக பயன்படுத்தப்படாமல் தொடர்ச்சியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ஒரு ஊழியருக்கு அனுமதிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிப்பணம் கட்டப்படாமையால் ரூபா. 31,850 மேலதிக கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மனித வள மேம்பாட்டு நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்ட 97 பதவியணியினரில் 67 பதவியணியினரே உள்ளபோதும் 30 குறைவாக காணப்பட்டது. நிறுவனத்தின் வேலைகள் சரியாக இடம்பெறுவதற்காக தேவையான கல்விசார் பதவிக்காக அனுமதிக்கப்பட்ட விரிவுரையாளர் 09 பதவியணியினரில் 02 பதவி வெற்றிடமாக இருந்தது.

(ஆ) அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு உள்ள குறைவுக்கான உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாது 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் 19 பேரும் அலுவலகப் பணியாளர் மற்றும் சுகாதார ஊழியர் 21 பேரும் ஆட்சேர்த்திருந்தது.

# 5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

## 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கைப்படி நிறுவனத்தில் தூரநோக்கு மற்றும் இலட்சிய நோக்கை அடைவதற்காக குறைந்தது 03 வருடத்துக்காவது கூட்டிணைந்த திட்டம் ஒன்று செய்யப்பட்டு அது வருடாந்தம் மீளாய்வு செய்து இற்றைப்படுத்தப்பட வேண்டும். ஆனாலும் இந்த நிறுவனம் கூட்டிணைந்த திட்டம் ஒன்றை 2013 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆண்டுவரைக்கும் தயாரித்திருந்த போதும் இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பெறுகைத் திட்டம்

2016 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 12 விடயங்களுக்காக ரூபா. 2,015,899 செலவு செய்து கொள்வனவு செய்திருந்தது. இதனால் பெறுகைத் திட்டம் செய்யும் போது நிறுவனத்துக்கு தேவையான அளவு கொள்வனவு செய்வது பற்றி பொருத்தமாக கருத்தில்கொள்ளப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

# 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்து முகாமைத்துவம் | நிலையான சொத்து பதிவேடு தயாரிக்கப்படவில்லை மற்றும் ஆண்டுக்குரிய இருப்பு மெய்மையாய்வு செய்யப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | முதலீட்டு முகாமைத்துவம் | முதலீட்டிற்காக திறைசேரி அனுமதி பெறப்பட்டமை மற்றும் தேவைப்பாட்டிற்கிணங்க முதலீடு செய்யப்படவில்லை. |
| (இ) | வருமான முகாமைத்துவம் | பயிற்சிக்கான வருமானம் சரியான முறையில் இனங்கண்டு கணக்கீட்டுக்கு கொண்டுவரப்படவில்லை. |
| (ஈ) | கணக்கீடு | i. பதவியினருக்கான தேவைப்பாட்டிற்கு ஏற்ப அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் மாற்றம் செய்யப்படவில்லை. மற்றும் குறைந்த பதவியினரை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br>ii. பயிற்சிக்கான வருமானம் சரியான முறையில் வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. |
| (உ) | ஊழியர் கடன் கட்டுப்பாடு | உத்தியோகத்தரிடம் கடன் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |